**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 59/2024** | **நாள் – 09.02.2026** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வினோத் | தந்தை பெயர் | வீரமணி |
| ஊர் | கீழமாஞ்சேரி | தாலுக்கா | பாபநாசம் |
| தொழில் | இல்லை | வயது | 24 |

**முதல் விசாரணை:**

நான் அசல் மனுவில் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல்நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

1. 07.08.2023 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை பதிவிறக்க நகல் ம.சா.ஆ.1
2. 06.08.2023 தேதியிட்ட கும்பகோணம் அரசு மாவட்ட மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு பதிவிறக்க நகல் ம.சா.ஆ.2
3. 06.08.2023 தேதியிட்ட கும்பகோணம் அன்பு தனியார் மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு பதிவிறக்க நகல் ம.சா.ஆ.3
4. 12.08.2023 தேதியிட்ட கும்பகோணம் அன்பு தனியார் மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்று அசல் ம.சா.ஆ.4
5. 12.09.2023 தேதியிட்ட கும்பகோணம் அன்பு தனியார் மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்று பதிவிறக்க நகல் ம.சா.ஆ.5

6. 22.08.2023 தேதியிட்ட TN–49–R–8337 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை பதிவிறக்க நகல் ம.சா.ஆ.6

7. 15.05.2007 தேதியிட்ட TN–49–R–8337 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் பதிவு சான்று பதிவிறக்க நகல் ம.சா.ஆ.7

8. 23.12.2022 தேதியிட்ட TN–49–R–8337 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் வாகன பாலிசி சான்று பதிவிறக்க நகல் ம.சா.ஆ.8

9. 25.04.2012 தேதியிட்ட TN–49–R–8337 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் பதிவிறக்க நகல் ம.சா.ஆ.9

10. 12.09.2023 தேதியிட்ட குற்ற இறுதி அறிக்கை பதிவிறக்க நகல் ம.சா.ஆ.10

11. 22.08.2023 தேதியிட்ட TN–68–AH–3620 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை பதிவிறக்க நகல் ம.சா.ஆ.11

12. மருந்து பில்களின் தொகுப்பு ரூ.112487/– அசல் ம.சா.ஆ.12 (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

13. லேப் ரிப்போர்ட் அசல் ம.சா.ஆ.13

14. ஸ்கேன் ரிப்போர்ட் அசல் ம.சா.ஆ.14

15. மனுதாரர் தொடர் சிகிச்சை எடுத்து கொண்டதற்கான மருந்து சீட்டு அசல் ம.சா.ஆ.15

16. மனுதாரரின் இருசக்கர வாகனம் பழுது பார்த்தற்கான பில்கள் அசல் ம.சா.ஆ16 (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

17. மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.17 (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

18. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.18

19. மருத்துவக்குழுமம் வழங்கிய இயலாமை சான்று அசல் நீ.ம.சா.ஆ.1

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>

நான் தனியார் பேருந்தில் நடத்துநராக பணியில் இருந்ததாக குறிப்பிட்டு இருக்கும் பட்சத்தில் எந்த நிறுவன பேருந்தில் பணி புரிந்தேன் என்றால் அய்யனார் பேருந்து நிறுவனத்தில் வேலை பார்த்தேன். நான் வேலை பார்த்ததாக கூறும் பேருந்தின் பதிவெண் என்னவென்றால் மறந்துவிட்டது. நான் எத்தனை வருடமாக எந்த குறிப்பிட்ட பேருந்தில் நடத்துநராக பணிபுரிந்தேன் என்றால் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தேன். அதற்கு முன்பும் அதே நிறுவனத்தில் வேலை பார்த்தேன். எத்தனை வருடங்களாக பணிபுரிந்தேன் என்றால் சில ஆண்டுகள் கிளீனராகவும் பின் நடத்துனராகவும் 10 ஆண்டுகள் வேலை பார்த்தேன். என் தந்தை என்ன வேலை பார்க்கிறார் என்றால் பால் கரவை மாடுகள் வைத்து மற்றும் விவசாயம் செய்து வருகிறார். எனது தாயார் என்ன வேலை பார்க்கிறார் என்றால் விவசாய வேலை பார்க்கிறார். எனது வீட்டில் பெற்றோர்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நானும் எனது தம்பியும் ஆவோம். என் தம்பி என்ன செய்கிறார் என்றால் கல்லூரியில் படித்து கொண்டிக்கிறார். எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் திருமணம் ஆகவில்லை. என் பெற்றோர்கள் தனியாக சம்பாதிப்பதால் அவர்கள் தங்களை பார்த்து கொள்வார்கள் என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் என்னையும் பார்த்து கொள்கிறார்கள். எத்தனை நாட்கள் நான் வேலை இல்லாமல் உள்ளேன் என்றால் விபத்தில் இருந்து 6 மாதம் வேலை இல்லாமல் இருந்தேன். விபத்து நடந்த தேதி மாதம் வருடம் ஞாபகம் உள்ளதா என்றால் 05.08.2023 ஆகும். விபத்து நடந்த காலத்தில்நான் எங்கு வேலை பார்த்தேன் என்றால் அய்யனார் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் வேலை பார்த்தேன். எனது பணி நேரம் என்னவென்றால் 24 மணி நேரம் ஆகும். ஒருநாள் விட்டு ஒருநாள் வேலை பார்ப்பேன் என்றால் சரிதான். மாதம் 30 நாளில் 15 நாள் வேலை என்றால் சரிதான். இரவு 12 மணியளவில் பேருநதை நிறுத்தி விட்டு காலை 6

மணிக்கு பேருந்தை எடுப்போம். விபத்து நடந்த அன்று எப்போது பணியை முடித்தேன் என்றால் சயங்காலம் 4 மணிக்கு முடித்தேன். வேலையை முடித்து விட்டு எதில் சென்றேன் என்றால் இருசக்கர மோட்டார் வாகனத்தில் சென்றேன். நான் சென்ற வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு சொந்தமானது. அதன் பதிவெண் என்னவென்றால் TN–68–AH–3620 ஆகும். தற்போது வரை மேற்கண்ட வாகனத்தை ஓட்டி வருகிறேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் வேலை பார்த்தாக கூறும் பேருந்தின் எண் மட்டும் எப்படி மறந்தது என்றால் விபத்திற்கு பிறகு மறந்து விட்டது. நான் நடத்துனராக எப்போது வேலை பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்காக நடத்துனராக பணிபுரிந்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் நடத்துனராக பணிபுரிந்திருந்தால் அந்த பேருந்தின் பதிவெண்ணை சரியாக சொல்லியிருப்பேன் என்றாலும் அவ்வாறு வேலை பார்க்காததால் தான் பேருந்தின் பதிவெண்ணை கூற இயலவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த அன்று எந்த திசையில் இருந்து எந்த திசையை நோக்கி சென்று கொண்டிருந்தேன் என்றால் திருப்புறம்பியத்தில் இருந்து கீழமாஞ்சேரி நோக்கி சென்று கொண்டிருந்தேன். பேருந்தை எங்கு நிறுத்தியிருந்தோம் என்றால் கும்பகோணத்தில் நிறுத்திவிட்டு சென்றேன். திருப்புறம்பியத்தில் இருந்து கீழமாஞ்சேரி சாலை அகலமாக சாலை என்றால் குறுகலான சாலை ஆகும். திருப்புறம்பியத்தில் இருந்து தார் சாலை உள்ளது என்றால் சரிதான். அங்கு சிவன் கோவில் உள்ளது என்றால் சரிதான். அதன் வழியாக கனரக வாகனங்கள் செல்லும் என்றால் சரிதான். இன்னம்பூர் அதற்கு அடுத்து திருப்புறம்பியம் ஆகிய இரு ஊர்களிலும் பிரசித்து பெற்ற சிவன் கோவில் உள்ளது என்றால் சரிதான். ஆகையால் இருஊர்களுக்கும் சேவார்த்திகள் வந்து செல்வார்கள் என்றால் சரிதான். அதனால் அது போக்குவரத்து நெரிசலான சாலை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு எதிரில் எந்த வாகனம் வந்தது

என்றால் டிராக்டர் டிப்பருடன் வந்தது. நானும் டிராக்டரும் எதிரெதிரே மோதி கொண்டோம் என்றால் சரிதான். விபத்து நடக்கும் போது நானும் டிராக்டரும் மட்டும் தான் அந்த இடத்தில் இருந்தோம் என்றால் சரிதான். விபத்து நடந்த நேரம் மதிய நேரம் என்பதால் எதிரே வரும் வாகனம் நன்கு தெரியும் என்றால் சரிதான். தினந்தோறும் வேலையை முடித்து விட்டு அவசரமாக செல்வேன் என்றால் சரியல்ல. நான் மெதுவாக தான் சென்றேன். நான் மெதுவாக சென்றிருந்தால் எதிரே வந்த டிராக்டரை பார்த்து நிறுத்தியிருந்திருக்கலாம் என்றாலும் வேகமாக சென்றதால் தான் டிராக்டரில் மோதி விட்டேன் என்றால் சரியல்ல. பொதுவாக டிராக்டர் கனரக வாகனம் இல்லை என்றாலும் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனம் என்றாலும் சரியல்ல. பொதுவாக டிராக்டர் மெதுவாக வரும் என்றாலும் டிப்பருடன் வரும் போது டிராக்டர் மெதுவாக வரும் என்றாலும் சரியல்ல. டிராக்டருடன் என் வாகனத்தை ஒப்பிடும் போது என் வாகனம் வேகமாக வரும் என்றால் சரிதான். விபத்தில் எனக்கு எங்கு அடிப்பட்டது என்றால் விபத்தில் நான் தூக்கியெறியப்பட்டு, தரையில் தலை அடிப்பட்டு விட்டது. டிராக்டரின் நடுபாகத்தில் மோதி அடிப்பட்டதா என்றால் ஆமாம். எனது வண்டிக்கு சேதாரம் ஏற்பட்டதா என்றால் சேதாரம் ஏற்பட்டது. எனது இருசக்கர வாகனத்திற்கு ரூ.1 லட்சம் வரை சேதம் ஏற்பட்டது. எந்த ஆண்டில் இருசக்கர வாகனத்தை வாங்கினேன் என்றால் 2019ல் வாங்கினேன். 2019ல் நான் ஸ்பிலெண்டர் வாகனத்தை வாங்கியதற்கான ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ம.சா.ஆ–16 ரசீதுகளை ராமன் அண்ட் ராமன் நிறுவனத்தின் மூலமாக தான் அதன் நம்பகத்தன்மையை நிரூபிக்க முடியும் என்றாலும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. மேற்கண்ட இருசக்கர வாகனத்தை சரி செய்வதற்காக ரூ.54242/– செலவானதாக ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரே வரும் வாகனத்தை பார்த்திருந்தால் உடனடியாக நிறுத்தியிருந்திருக்கலாம்

என்றாலும், என் மீதும் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை உள்ளது என்பதாலும், தன்பால் கவனமின்மை விதியின் படி சரிபாதி (Contributory Negligence) உள்ளது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக நான் தான் புகார் கொடுத்து அதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தலைகவசம் அணிந்திருந்தால் தலையில் அடிப்பட்டு இருக்காது என்றால் தலைகவசம் அணிந்திருந்தேன். உள்காயம் அடிப்பட்டது. நான் கொடுத்து புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் நான் தலைகவசம் அணிந்திருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு தலையில் அடிப்பட்டதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4, 14 ஆகிய ஆவணங்கள் வழக்கிற்காகதயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தலைகவசம் அணிந்தால் தலையில் அடிப்படாது என்றால் சரிதான். நான் உள்நோயாளியாக 6 நாட்கள் அனுமதிக்கப்பட்டிருந்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் எந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன் என்றால் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் 2 நாட்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்ட்டிருந்தேன். அதற்கு பிறகு கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் 1வாரம் உள்நோயாளியாக அனுமதிக்கப்ட்டிருந்தேன். நான் சொல்வது போல் எனது பிரதான மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றாலும், மொத்தம் ஆறு நாட்கள் மட்டுமே உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகள் ரூ.250000/-க்கு கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு வேறு எங்கு அடிப்பட்டது என்றால் தலையை தவிர வலதுகாலில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டது. எலும்பு முறிவிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டதா என்றால் பிளேட் வைத்து அறுவைசிகிச்சை செய்யப்பட்டது. மேற்கண்ட அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் விடுவிப்பு சான்று தாக்கல் செய்துள்ளேன். எக்ஸ்ரே

மற்றும் ஸ்கேன் ரிப்போர்ட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி சென்று வாகனத்தை ஓட்டி சென்றேன் என்றாலும் என் மீது 50 சதவீத தவறு உள்ளது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது. எனது வாகனத்தின் காப்பீடு நிறுவனம் யார் என்றால் சோழமண்டலம் இன்சூரன்ஸ் கம்பெனியில் காப்பீடு செய்திருந்தேன். எனது காப்பீடு நிறுவனத்தை தரப்பினராக மனுவில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது காப்பீடு நிறுவனத்தை தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றாலும் அந்த நிறுவனம் 50 சதவீதம் இழப்பீடு தர வேண்டும் என்றாலும் சரியல்ல. அவ்வாறு எனது வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்காததால் 50 சதவீதம் இழப்பீடு தொகையை நான் இழக்க நேரிடும் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட உபாதைகளுக்கு பிசியோதரபி சிகிச்சை முறையாக பெற்றிருந்தால் பூரணமாக குணம் அடைந்திருக்கும் என்றாலும், விபத்து நடந்து 3 ஆண்டுகள் ஆகிவிட்டதால் எனக்கு ஏற்பட்ட உபாதைகள் மற்றும் காயங்கள் சரியாகிஇருக்கக்கூடும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றாலும், அதை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் வழங்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.02.09 05:08:08 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*